# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 ஜனவரி மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I. தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II. அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV. மனுக்கள்**

**V. கேள்விகள்**

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)18/01)**

அ. அவிஸ்ஸாவலை ஆதார வைத்தியசாலைக்குரிய பல கட்டடங்கள் வைத்தியசாலைப் பணிக் குழுவிற்கு உரித்தில்லாத நபர்களினால் பயன்படுத்துகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள பல்வேறுபட்ட தரங்களைக் கொண்ட பெரும்பாலானோர் உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாது தனிப்பட்ட இடங்களில் வசித்து வைத்தியசாலைக்கு சேவைக்காக வருகின்றனர் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. வைத்தியசாலைக்குரிய கட்டடங்களை வெளியாட்களுக்கு வசிப்பதற்கு வழங்கியதனால் சிறப்புரிமை கிடைக்க வேண்டிய அலுவலகர்கள் மற்றும் பல்வேறுபட்ட சேவைகளில் உள்ளவர்களுக்கு அநீதி ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. இது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX. சபைக் கூட்டம்**

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :

**பிரேரணை :**

இன்றைய தினம் (2018.01.23 ஆந் திகதி) கலைந்து சென்ற பின்னர் இச் சபை 2018.02.20 ஆந் திகதி மு.ப 09.30 க்கு, கூட வேண்டியதுடன், 2018.02.06 (செவ்வாய்க்கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாகக் கருதி செயற்பட வேண்டும்."

**X. சபை நடவடிக்கை**

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :

**பிரேரணை :**

இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."

**XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்**

**01.** **கௌரவ நிஷாந்த சிறீ வர்ணசிங்ஹ அவர்கள்**

இலங்கையில் திறந்த பொருளாதாரத்திற்குரிய சந்தையினை அறிமுகப்படுத்தியதுடன் பாவனை செயற்பாடு விரைவாக அதிகரித்ததன் பலாபலனாக அகற்றப்படும் கழிவுகளின் அளவும் விரைவாக அதிகரித்துச் சென்றது. அவ்வாறு அகற்றப்படும் கழிவுகளில் உக்காத லன்ச்சீட், சிலிபேக், ரெஜிபோம், பொலிதீன்

போன்றன பெருமளவு சேர்ந்துள்ளதுடன் அதன் பலாபலனாக உக்கும் கழிவுகள் உக்கல் அடைய

தாமதமாகுவதுடன், சுற்றாடலுக்கும் சமூகத்திற்கும் சிறந்த ஆரோக்கியத்திற்கும், பிற விலங்குகளுக்கும் பாரிய அளவு தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன், உக்காது குப்பை மேடு நிரப்பப்படுவதினால் பாரிய அளவு துயரமான விடயங்களும் உயிரிளப்புக்களும் நிகழ்ந்துள்ளது.

கழிவுகளை அகற்றுவதற்கு, உக்குவதற்கு, மீள் சுழற்சி செய்வதற்கு மற்றும் கொம்போஸ்ட் உற்பத்திக்கு லன்ச்சீட், சிலிசிலிபேக், பொலிதீன் பாரிய அளவு தாமதத்தினையும் தடை ஒன்றினையும், செலவினையும் ஏற்படுத்துகின்ற படியால் அவற்றை உற்பத்தி செய்தல், விற்றல் மற்றும் பயன்படுத்துவதைத் தடை செய்து மேன்மை தங்கிய ஜனாதிபதி உள்ளிட்ட அரசு எடுத்த தீர்மானத்திற்கு இந்நாட்டின் எதிர்கால பரம்பரையினர் மற்றும் சுற்றாடல் தொடர்பாக உற்பத்தித் திறன் மிக்க கொள்கை ரீதியான முடிவொன்று என பாராட்டுக்கு மற்றும் மதிப்பிற்கு உட்பட்டுள்ளதுடன், நாட்டுக்காக இப் பொலிதீன் தடையினை நடைமுறைப் படுத்துவதற்கும் அதற்குரிய சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும், மேல் மாகாண சபை ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என பிரேரணை தெரிவித்து, இக் கொள்கையினை எந்தவொரு நிர்ப்பந்தம் காரணமாகவும் மாற்றக் கூடாது எனவும், சுற்றாடலை நேசித்தல் மற்றும் மேம்படுத்தலை விரைவாக மக்கள்மயப்படுத்த வேண்டும் எனவும் இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/09)**

**02.** **கௌரவ ரோஸ் பிரணாந்து அவர்கள்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பு திருத்தப்பட வேண்டும் என இந் நாட்டின் இடதுசாரி அரசியல் கட்சிகளும் அதேபோல் வலதுசாரி அரசியல் கட்சிகளும் அதிகளவாக பேசுவதுடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை இல்லாதொழிக்கச் செய்ய வேண்டும் என பலமான ஆர்ப்பாட்டங்களும் நாட்டினுள் நடாத்தப்படுகின்றன. இதன் கீழ் இந் நாட்டிற்கு ஏற்ற அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கும், ஜனாதிபதியிடம் காணப்படும் வரையரையற்ற அதிகாரத்தினை பாராளுமன்றத்திற்கு கையளிப்பதற்கும், கடந்த தேர்தலில் உறுதிமொழி அளிக்கப்பட்டது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாக உறுதிமொழி அளித்த முன்னைநாள் ஜனாதிபதி எவரும் அதனை இல்லாதொழிக்காத போதும் தற்போதைய ஜனாதிபதி தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்கு ஏற்ற முறையில் அமுல்படுத்தப்பட்டிருந்த 18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை இல்லாதொழித்தது சிறந்த முறை ஒன்றாகும். தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர், நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு இணங்க எல்லா கட்சிகளையும் ஒன்று சேர்த்து அரசியல் அமைப்புத் திட்டம் ஒன்றினைக் கொண்டு வர சிறந்த நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் சுய அரசியல் இலாபங்களை இல்லாதொழித்து இந் நாட்டிற்கு ஏற்ற அரசியல் அமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு எல்லா மக்களும் ஒன்று சேர வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)17/10)**

## XII. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை** :

"**மேல் மாகாணத்தின் 2017 இன் ............. ஆம் இலக்கம் பொருட்களை அடகுபிடிப்பவர்களுக்கான (திருத்திய) நியதிச் சட்டம்**"

**(இரண்டாம் முறை வாசித்தல்)**

(2017.08.22 ஆந் திகதி முதலாம் முறை வாசிக்கப்பட்டது)
இணைப்பு 01 - சட்டநியதிச் சட்ட செயற்குழுவின் அறிக்கை 2017.12.07
இணைப்பு 02 - நியதிச் சட்டத்தின் நகல் பிரதி

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.01.10** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,

செத்சிறிபாய,
பத்தரமுல்ல.